# காலாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் -- 2 ( 2022 )

பன்னிரெண்டாம் வகுப்பு

வணிகவியல்

நேரம் : 3.00 மணி    மதிப்பெண் : 90

பகுதி -- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.    20 × 1 = 20

1. மேலாண்மை என்பது ஒரு ------------
அ) கலை ஆ) கலை மற்றும் அறிவியல் இ) அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2. பின்வருவனவற்றுள் எது முக்கிய செயல்பாடு அல்ல?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல்
இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணிக்கமர்த்துதல்

3. ----------------------- முறை தனிப்பட்ட வலிமை மற்றும் பொறுப்பிற்கு முழு வடிவம் கொடுக்கிறது.
அ) குறியிலக்கு மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

4. மூலதனச் சந்தை என்பது -------- க்கான ஒரு சந்தை ஆகும்
அ) குறுகியகால நிதி ஆ) நடுத்தரகால நிதி
இ) நீண்டகால நிதி ஈ) குறுகிய கால மற்றும் நீண்டகால நிதி

5. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ---------
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

6. பணச்சந்தை வழங்குவது ---------------
அ) நடுத்தரகால நிதிகள் ஆ) குறுகியகால நிதிகள்
இ) நீண்டகால நிதிகள் ஈ) பங்குகள்

7. ஒவ்வொரு பங்குச்சந்தையின் ஆட்சிக் குழுவில் ------------- உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு நிதி அமைச்சகம் செபியிடம் அதிகாரம் அளிக்கிறது.
அ) 5 ஆ) 3 இ) 6 ஈ) 7

8. மனித வளம் என்பது ஒரு ---------------- சொத்து
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலயான ஈ) நடப்பு

9. பணியாளர்களிடையே வேலைப் பகிர்வினை ஏற்படுத்துவது ------------
அ) திட்டமிடுதல் ஆ) அமைத்தல் இ) இயக்குவித்தல் ஈ) கட்டுப்படுத்துதல்

10. இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது -------------- மூலமே சாத்தியம்.
அ) கணினி ஆ) இணையம் இ) அகன்ற வரிசை ஈ) 4 ஜி

11. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதில் பின்வருவனவற்றில் எவை பல்வேறு பண்புகளை அளவிட பயன்படுகிறது ?
அ) உடல் பரிசோதனை ஆ) உளவியல் சோதணை
இ) திறனாய்வு சோதனை ஈ) நிபுணத்துவம் சோதனைகள்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

12. சரியானதை தேர்ந்தெடுக்கவும்
அ) எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர், காளை ஊக வணிகர்
ஆ) இந்தியாவில் உள்ள பங்கு சந்தைகளின் எண்ணிக்கை 25
இ) ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை உலகின் மிகப் பழைய பங்கு பரிவர்த்தனை நிலையமாக கருதப்படுகிறது
ஈ) எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர் கரடி

13. பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில்
இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

14. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக் கூறு ஈ) விலை கூறு

15. கூற்று ( A ) : இன்றைய தொழிலில், பிரபலங்கள் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்வது ஒரு வாடிக்கையாக உள்ளது.
காரணம் (R) : சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் புகழ்பெற்ற நபர்களை, நுகர்வோர் எளிதில் அடையாளம் காணப்பட்டு, அதன் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.
அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது A க்கு சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது A க்கு சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

16. நுகர்வோர் இயக்கத்தின தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப். கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

17. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் -----------------
அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்
இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை

18. இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையை ------------ என்கிறோம்.
அ) பசுமை சந்தையிடுதல் ஆ) மின் சந்தையிடுதல்
இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்

19. பங்கு பரிவர்த்தனை சந்தை மேலும் இவ்வாறு அழைக்கப்படுகிறது
அ) களச்சந்தை ஆ) உள்ளுர் சந்தை
இ) பத்திரங்கள் சந்தை ஈ) தேசிய சந்தை

20. கீழே கொடுக்கப்பட்டவைகளில் சரியாகப் பொருந்தாத இணை எது?
அ) நேர்முகத் தேர்வு - நேரடி புறவளம்
ஆ) பதிலாயனுப்புதல்: - மறைமுக புறவளம்
இ) பதவி இறக்கம் - புறவளம்
ஈ) தக்கவைத்தல் - அகவளம்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

## பகுதி — II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
22. மேலாண்மையின் துணை செயல்பாடுகளை பட்டியலிடுக
23. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
24. தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?
25. மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.
26. ஆட்சேர்ப்பின் பொருள் தருக
27. பணியமர்த்தல் என்றால் என்ன?
28. ஒழுங்கு முறை சந்தை என்றால் என்ன?
29. சிறு குறிபபு வரைக — நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986
30. உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல், என்னவென்று அழைக்கப்படுகிறது? உதாரணம் தருக.

## பகுதி — III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை?
32. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக
33. வணிக இரசீதின் வகைகளில் மூன்றினை எழுதுக.
34. கலைமான் மற்றும் முடவாத்து ஊக வணிகர்களை விளக்குக.
35. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன?
36. மனஅழுத்த நேர்காணல் என்றால் என்ன?
37. காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
38. மின் சந்தையிடுதலின் நன்மைகளை விவரி
39. நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
40. தனியிடச் சந்தை பற்றி விளக்குக

## பகுதி — IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துகளை விவரி. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986 - ன் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 5 )



42. அ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக? ( ஏதேனும் 5 )

43. அ) நிதிச்சந்தையின் பங்கினை விவரிக்கவும்

( அல்லது )

ஆ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.

44. அ) பணச்சந்தைக்கும் மூலதனச்சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி

( அல்லது )

ஆ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக? ( ஏதேனும் 5 )

45. அ) செபியின் அதிகாரங்களை விவரி ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. ( ஏதேனும் 5)

46. அ) பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக? ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விளக்குக

47. அ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக. ( ஏதேனும் 5 )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net